956
No. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும்
வெளிவரும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 MAY 1938
MADRAS

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — [illegible].

"அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணாங்களே" — கம்பர்.

தொகுதி 2 } ஈசுவர ஹு பங்குனி மீ } பகுதி 3.
Vol. 2 } APRIL 1938 } No. 3.

உள்ளுறை.

1.	தருமப்பெருமை.	பத்திராசிரியர்.	18
2.	கம்ப ராமாயணக் கதிர் மணிக்கோவை.	ஸ்ரீ கோவை. திரு சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்.	23
3.	கம்பர் திருநாட்கொண்டாட்டம்.		33

[illegible]ரியர்:—
[illegible]சவய்யங்கார். M. A. B. L., அட்வகேட்.

[illegible] ஒன்று] [தனிப்பிரதி அணா ஒன்றரை

72
ஊ 211, ந37வ ன
ந38.2.3
208487

சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந்தெடுத்த கட்டியான வெண்ணெயும் நறுமணத்த புத்துருக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வழுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய்யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடையில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக்காது. மிக்க பலமுண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வகுளமாலை

தொகுதி 2.	ஈசுவர ௵ பங்குனி ௴	பகுதி 3.
Vol 2.	APRIL 1938.	No. 3.

தருமப் பெருமை.

சுருதியேவுமாறுறுதி தேறுவார்
கருதியாகு தங்கரும மூன்றுவார்
தருமமீதெனப் பிறருமேதொழும்
குரவர் யாவரும் கருதியேயுளார்.

இத்திறத்தையே யிங்கணேக்கியாம்
முத்திறத்தவம் மெய்ம்மைமீமிசைச்
சித்திரப்பரன் சத்தியாயுயர்
சித்திசேரறச் செப்பமொப்புவாம்.

முதற்றொகுதியில் விரிக்கப்பட்டுவந்த தருமத்தின் தூய்மையை இனிப்பின்னும் தொடர்ந்து விளக்குவாம். அவ்விரிவின் சுருக்கம் வருமாறு:—

உலகத்தைத் தாங்குவதே தருமம். தருமம் என்றது வருணம் என்றும், சரணம் என்றும் இருவகைத்தாம். அவற்றுள் வருணம் என்றது ஆக்கையைப்பற்றியது. பிறப்பொழுக்கத்துக்கு வருணமே அடி. பரதத்துவம் ஒன்றே கற்கப்படவேண்டும் தத்துவம். கற்கும் தத்துவமே அவரம் என்னும் சேதநதத்துவம். அவரன் கல்விக்குப் பரனே நோக்கு. அறிபவன் அவரன். அறியப்படுபவன் பரன். அவரன் சரீரம். பரன் சரீரி. சரீரியையே சரீரத்தின் அறிவு நோக்கும். இவ்வறிவுடைத்தாயதே, சேதநதத்துவம்.

[illegible] பகுதி என்னும் சடதத்துவம். பரன் கற்கப்படவே சேதநர்கள் கரசரணங்களோடு பரனால் படைக்கப்பட்டுள்ளார்கள். கருதும் பரன், படைப்புக்கு நிமித்த காரணம். சேதநர்கள் பண்டைக் கருமசக்தி முக்கிய காரணம். கர்ம மடியாகப் பரன் கருத்தால் பெற்றுள்ள ஆக்கை நோக்கி அவ்வவ்வாக்கையுடன் அவ்வச் சேதநர்கள் மன்னியிருக்குமளவும் விடவொண்ணாக கருமங்கள், பரன் கருத்தாகிய மறையால் வகுக்கப்பட்டுள்ளன. மறை ஏவலோர்ந்து தகநிற்றலே படைக்கப்பட்ட சேதநர்கள், படைத்த பரனது ஆணை காக்கும் நெறி. ஈதே வருண நெறி. சாஸ்த்ரமாகும் பரனுடைய ஆணைகாத்தல் ஒன்றே சேதநர்களை ஜடத்தினின்றும் பாகுபடுத்திக் காட்டும் இலக்கணம் என்று வ்யாஸ பகவான் சூத்திரம் பணித்தார். பரன் ஸர்வ சரீரி என்றதை உடன்பட்டார்க்கு ஆக்கையுள்ள அளவும் பரன் வகுத்துள்ள இந்நெறி காத்தலே தருமம் என்றும், அவனதடியார்கட்கு உரியதோரியல்பென்றும், இராமாநுசமுநி மாரி முழக்கம் செய்துள்ளார். விடவொண்ணா இந்நெறிகாத்தலையே பரன் பொன்னடிக் கடவாமை என்று ஆழ்வார் அறுதியிட்டுள்ளார். இத்திறத்தரும வடிவனை ஸர்வ சரீரியான பரன் என்றதை "நெறிமுறை நால்வகை வருணமுமாயினை" என்று திருமங்கை மன்னன் அன்னவனையே விளித்தருளியுள்ளார். இம்முறையால் ஸர்வ சரீரியின் நிமித்தகாரணத்தே நிலையுற்று அவனது பரத்துவத்தை நிலைநாட்டிக்காக்கும் தருமமே வருணம் என்றதாகும். பிரமன் தொடக்கமாய், தம்பமீறாகப் படைப்பு முற்றவும் வருணத்தே யாக்கப்பட்டுள்ளதென்றும், ஆதலின் ப்ரபஞ்சத்தில் வருணமற்ற பொருளில்லையென்றும், ஈதே பேருருவிலக்கண நுட்பமென்றும், இந்நுட்பம் விளக்கும் உண்மையே உலகத்தில் காணப்படும் பொருளனைத்தும் அசித்விசிஷ்ட ஜீவசரீரக பரமாத்மா என்றும், இராமநுசமுனி சித்தாந்தம் செய்துள்ளனர். இந்நெறிக்கண்ணே உலகு யாப்புற்றுள்ளதென்ற இம்மெய்ம்மையை, வைதிகரல்லாதாரும் முற்காலத்து இயைந்துள்ளார்கள் என்று தெரிகிறது. அவ்வப்பெரியார்கள் கருத்தைச் சிறிது குறிப்பிடுவோம். பிறவித் தருமம் என்றதை உலகனைத்தும் ஒரு காலத்தில் இசைந்திருந்ததென சரித்திரம் ஆராய்ந்து தெளியலாம். அத்தகையதோர் பாகு

பாட்டின் கட்டில்தான் உலகு சீர்குலையாது நிலைநிற்குமென்று அவ்வவர்கள் நன்குணர்ந்துள்ளார்கள். இக்கருத்தில் அவ்வவர்கட்குள்ளும் சிற்சிலவேற்றுமைகள் இருந்தபோதிலும் இத்திறநெறியொன்று உலகின் நன்மைக்கு இன்றியமையாததென்றதை நன்கு உடன்பட்டுள்ளார்கள். பரம்பரையாய்ப் பெற்றுப்போரும் தொழிற் பாகுபாடுகளில் மாறுபாடுகூடாதென்றும், மாறுபாட்டில் சேமமில்லையென்றும், தொழிற்பாகுபாடுகள் குலமுறையாய் வந்துள்ளனவென்றும், ஏபெல், கெயின், சபால், சுபால், என்பவர்கள் அப்பாகுபாட்டால் குறிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், நோவா என்பவர் அவைகளை நன்குணர்ந்தவர் என்றும், ஷேம், நோவா, ஜாபத், ஹாம், என்பவர்களை, முறையே அந்தணர், அரசர், வாணிபர், வேளாளர், எனக்கொள்ளவமையும் என்றும், இவைகள் "ஆதியாகம" த்தில் பல விடங்களிலும் உய்த்தறியக்கிடக்கின்றனவென்றும் கூறுகிறார்கள். அந்நூலிலேயே கூறியுள்ள எகிப்து தேசத்திலும் இப்பாகுபாடு தழைத்தோங்கியுள்ளதென்றதை சரித்திர வாயிலாகத் தெளியலாம். குருக்கள் என்னும் சாதியார்களுக்கு ஸர்வமாந்யமாய் நிலங்கள் விடப்பட்டு, அவர்கள் நன்கு போற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். எகிப்தியர்களுக்குள் நன்கு வளர்ந்து வந்த சாதிப்பாகுபாட்டின் சீர்மையில் கிரேக்கப் பெரியார்கள் ஈடுபட்டார்கள் என்றும், இதன் நலம் கண்டு ஆதேன் நகரில் இந்நெறியை ஸோலன் என்பவர் பரவச்செய்தார் என்றும், க்ரோட் என்பவர் கிரேக்க சரித்திரததில் குறித்திருக்கிறார். குருக்கள் குலம் நன்கு பாராட்டப்பட்டு வந்தாலும், பிறர்கள் சிறிதும் இகழ்வின்றியே தத்தம் தொழில்களைப்புரிந்து அனைவரும் அன்பார்ந்தே வந்தார்கள் என்று எகிப்தியர் சரித்திரம் கூறுகிறது. கல்கியா, இபேரியா, எத்ரூரியா, பெரு, மெக்ஸிகோ முதலிய தேசங்களிலும் இவ்வாறே பரம்பரையான சாதிப்பாகுபாடு இருந்துள்ளதென்று தெரிகிறது. ஐயோனியர்களுக்குள்ளும் சாதிப்பிரிவு இருந்துள்ளது. ஸ்பார்ட்டர்களும், ஹெல்லர்களும், இப்பிரிவை நன்கு பாதுகாத்தார்கள். பாரஸீகத்திலும் நான்கு வகுப்புகள் இருந்துள்ளனவென்று தெரிகிறது. ஜொரோவாஸ்தர் என்னும் பெரியார், குருக்கள், போர்வீரர், வேளாளர், தொழிலாளர் என்ற நான்கு

வகுப்பில் ப்ரபஞ்சம் முழுதும் நிர்கின்றதென்று கூறியுள்ளார். யூதர்களுக்குள்ளும் இப்பாகுபாடு ஓர் படியாய் இருந்துள்ளதென்றும், ஏரோன் காலத்துக்குப் பின்னர் பாரம்பரிய ஏற்பாடு நன்கு வளர்ந்ததென்றும் வெளியாகிறது. சால்தியர்களும், க்ரேக்க "ரிஷி"களும் ஞானியர்கள் குலமுறையை நன்கு காப்பாற்றி வந்தார்கள் என்று ஏற்படுகிறது. சீனர்களுக்குள்ளும் "ஷீஹ்ற" "நூங்" "கூங்" "ஷாங்" என்ற நால்வகைப் பாகுபாடுள்ளதென்றும், ஏக குடும்ப வாழ்ச்சி பெரிதும் போற்றப்படுகிறதென்றும், சீனஸ்திரீகள் ஆடவர் பிறர்களோடு நெருங்கிப்பழகார்கள் என்றும், ஆராய்ச்சியாளரான ஒரு சீனப்புலவர் கூறியது பத்திரிகைகளில் சில மாதங்கட்கு முன் வெளிவந்துள்ளது. பௌத்தர்களும் சாதிப் பிரிவை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கும் வைதிகர்களுக்கும் வாசி என்னெனில், சமணனானால் சாதிகழியும், அவனுக்கு வருணநெறி இல்லை, என்றது பௌத்தர் கொள்கை. சாதி கழியாது என்றது வைதிகர் கொள்கை. ஈதே இருவர் கொள்கைக்கும் வாசி என்றதை இருவரும் உடன்பட்டிருக்கிறார்கள். சில கிரிசைகளால் சாதி அகலும் என்றதை மகா கச்சாணர் என்னும் பௌத்தசமயாசிரியரே முதல்முதலில் உபதேசித்தார். அகலாது என்றதை இராமாநுசமுநி போன்ற வைதிக சமயாசிரியப் பெரியார்கள் உபதேசித்தார்கள். அவைதிகம் என்றதற்கு சாதி அகலும் என்றதை பத்யதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் எம்பெருமானார் அடையாளமாகக் காட்டினார். வருணநெறி காப்பதையே வைணவத்தலைவர்கட்கு இலக்கணம் என்று கீதாபாஷ்யத்தில் அன்னவர் விளக்கினார். இவ்வாறு பிறர் பிற்காலத்துக் கூறினார் என்றது கொண்டு, எக்காலத்தும் அவ்வாறே கூறப்பட்டதென்று துணிய இடமில்லை. ஈண்டு ஒன்றையே எடுத்துக்காட்டுவோம். புத்தர் பெருமான் தாமே செய்துள்ள உபதேசத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு காண்கிறோம்:—

"Even a Khattiya who has Sinned in deed, word or thought and become a heretic, on account of that heresy, **on the dismemberment of his frame at his death**, he is born in tormenting, everlasting, and unendurable hell. Such is also the fate of the Brahma, the Wesso, and the

Suddo, as well as of the Samano or ascetic. But if a Khatto lead a righteous life in deed, word and thought, and be of the true or Supreme faith, by the merit of that faith, **on the dismemberment of his body at death,** he is reproduced in the felicitous Suggaloka heavens." (Tournour Journ. Asi. Society, August 1838). ஆக்கை நிற்குமளவும் வருணம் நிற்கும் என்ற குறிப்பு உய்த்தறியத்தக்கது. சம்பூத ஜாதகத்திலும் இக்கருத்து ஐதிகங்கள் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை வேறிடத்து புத்தர் தாமே உவமையால் விளக்கிக்காட்டினார் என்று காணப்படுகிறது. வருணத்தால் வேறுபட்டிருப்பினும், நிர்வாணம் பெற்றால் பலன் ஒன்றேயாகும். ஒரு திருவிழாப் பந்தலில் அநேக மலர்கள் அநேக வருணங்களோடு காணப்படுகின்றன. அம்மலர்களின் சாயைகளுக்கு அவ்வித வருணவேற்றுமையில்லை, என்றது காட்டப்பட்டது. ஆக்கை மன்னிய ஆத்மாவை மலர் என்று உவமித்தார். நிர்வாணம் பெற்ற பின்னரே ஆன்மாவை வருணமகன்ற காயை என்று கூறினார். பிறப்பை மலர் என்றும், ஸ்வரூபத்தை சாயை என்றும் விளக்கியது நன்கு நோக்கத்தக்கது. இக்கருத்தை பிற்காலத்துப் புத்த சமயப்பெரியார்கள் ஆக்கையாகும் மலர் நிற்கச்செய்தேயும் அதன் வருணம் அகலும் என்று கூறி வரலாயினர். மச்சிமநிகாயத்துள் ஓர் பாகமான மதுர சூத்திரத்தை விரித்த புத்தப்பெரியாராகிய மகா கச்சாணர் என்னும் அந்தணர் அவந்தி நகரத்தரசனுக்கு முதல் முதலில் இவ்வுபதேசம் செய்தார் என்று காணப்படுகிறது.

ஆக, எச்சமயப்பெரியாரும் பிறப்பொழுக்கத்தையும் நற்குணத்தையும், நன்கே வலியுறுத்தியுள்ளார்கள் என்றது நன்கு தெளியலாம். அன்பு மிகுந்து உலகம் செழித்து வளர இவ்விரண்டும் இன்றியமையாவென்றது அனைவரும் உடன்பட்டதே. ஆயினும் பிறப்பொன்று கொண்டே பெருமையை ஏறிட்டுக்கொண்டும், நல்லொழுக்கத்தையும், நற்குணத்தையும், கைவிட்டும், சிலர் நடித்து வரலாயினர். அக்காலத்துப்போல் இக்காலத்தும் இத்திற நடிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறதென்றது மறுக்க இயலாது. இந்நடிப்பின் மிகுதி நோக்கியே, அவ்வப்பெரியார்கள், நல்லுணர்வையும்,

நற்குணத்தையும், நன்கறிவுறுத்தி, பிறப்பொன்றுகொண்டே பெருமைபேசுவதை இழிவுபடக்கூறியுள்ளார்கள். ஜாதி மாத்ர சரணா பஹிஷ்க்ருதா : கேசிதாத்ருதஜகர்யவ்ருத்தய :| ரோஷணு விபரீதா விநோமுஹ¬ : ஹ்ரேபயந்தி ஜநமுச்சிதஹ்ரிய :|| என்று சிலேடை செழிக்க, பிறப்பொன்றையே தஞ்சமாய்ப்பற்றி நடித்து வருபவர்களை நம் தேசிகனர் இகழ்ந்திருக்கிருர். இவ்வாறே அவ்வச்சமயப் பெரியார்களும் கூறியுள்ளார்கள். தருமத்தே நிலையுறற்பொருட்டேயல்லாது, வகுத்த தருமத்தை அறவேயொழித்து, தத்தம்பிறப்பொன்று நோக்கித்தாமே பெரியார்கள் என்று நடித்தற் பொருட்டல்ல, என்றதே நல்லறவோர் துணிபு நம்பெரியாரனைவரும் இவ்வாறே திண்ணம் தேறியுள்ளார்கள். நல்லறம் வளர்ந்து நல்லன்பு செழிக்குமாறு அனைவரும் பெருமுயற்சி செய்யவேண்டியது. ஈதொன்றே நல்லார்க்கு வகுத்ததாகும். ஈதே ஆண்மை சிறந்த புருடோத்தமனை இறைவன் இட்டுப்போந்ததோர் கட்டளையாகும். இந்நெறியின்கண்ணே உலகம் கட்டப்பட்டுள்ளதென்றும், ஆதல்பற்றி இது காக்கப்படவேண்டுமென்றும், இது காப்பதே பகவதாராதநம் என்றும், பகவந்முகோல்லாஸநம் என்றும், நம் பெரியார்கள் உபதேசித்ததை நன்கோர்ந்து நல்லொழுக்கமும் நல்லன்பும் செழித்தோங்குமாறு முயன்று பரனருள் பெறுவோமாக.

அருளியேஉவகைபூக்கும் அரியெனும்கரியசெம்மல்
அரிமுகப்பெருமைபூத்தே அவனதென்றவனியொன்றும்
தருமமாவுருவமாகும் திகிரிமேற்றமர்கள்பேணச்
சுருதிகட்கிறுதியாமாணையெனக்காண நின்ருன்.

பத்திராசிரியர்.

—:(o):—

கம்பராமாயணக் கதிர்மணிக்கோவை.

(கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் • எழுதியது.)

பெருங்காப்பியத்திற்கு உரிய சிறப்பிலக்கணங்கள் அனைத்தும் நிறையப் பெற்றது கம்பராமாயணம். 'நவீன காவியம்' என்றும்

நவில்வர்புலவர். புதுமைக் காவியங்களுக்கான சந்தர்ப்பங்களும், சம்பவங்களும், ஏற்ற செய்திகளும் இதனுள் மிகுதியாக அடுக்கிக் கூறப்பட்டுள்ளதனலென்க 'இராமாவதாரம்' என்பது, இரகு வீரனது ஒப்பற்ற புகழ்ச்சரிதம். பெருங்காப்பியமாகிய இது, வாழ்க்கை வரலாற்றினின்றும் வரையப்பட்டதெனினும், கல்விக் கடலனைய புலவர் கம்பரிடத்து அமையப்பெற்றுள்ள அருங் கலையின் அபார வல்லமைகள் அதில் மிகுதியாகப் பொதியப்பட்டு மிளிர்கின்றன. காவியத்தில் முதன்மையாகத் தொடங்கும் விஷயத்தை நூலளவினும் மிக்க நுண்ணறிவு படைத்த கம்பர், பகுத்தறிந்து அதனை அரிய இனிய மொழிகளிலும், அழகிய நடையிலும், அலங்கார வாசகத்திலும், தெளிந்த சொல்லமைப்பிலும் நயம் பெறவமைத்துக்கற்போர் இது ஞானோதயமோ! வானோர் மொழியோ! என்று வியந்து மகிழ்ந்து வாயார வருணிக்கும் தன்மையில் விவரித்திருக்கின்றனர். இது 'கலைக்காவியம்' என்றும் பெருங்காவியம்' என்றும், பிரஸ்தாபிக்கப் படுகிறது.

பெருங்காப்பிய முறையில் சமைக்கப்பட்ட தமது இராமாயணத்தில் கம்பர், புதுமை பெறப் புதிக்கிய அருமைப்பாடுகள் மிகப்பல. சுருங்கக்கூறின், அவை மாற்றுயர்ந்த பசும்பொன்னால் ஆக்கப்பெற்ற பொற்புறு அணிகலன்களும், அவற்றின் அழகு மேலுஞ் சிறந்து பொலிய விலையுயர்ந்த வைரமணிகளைச் சிறக்கு மிடமறிந்து பொருத்திக்கண் கூசும்படி மெருகிட்டதுமாம். இந் நலத்தால் தமது காவியம், சிறப்பும், அழகும் பெற்று, கண்டார் வியந்து களிக்கவும், காணுதார் விரும்பிக்கொள்ளவுமான ஏற்றம் பெற்றிலங்குவதற்குமாயிற்று.

ஆதிகவியாகிய வால்மீகமுனிவர் செய்த சம்ஸ்கிருத இராமாயணத்தை கம்பர், வடமொழி வல்ல புலவர்களைக்கொண்டு இரவு முழுதும் பிரசங்கஞ்செய்யச் சொல்லிக்கேட்டு, அவற்றைத் தம் நெஞ்சிற் பதியவைத்து மறுநாள் உதயத்தில், தாம் இரவில் செவி மடுத்த பகுதிகளைத் தமிழ்க்கவிகளில் பாடினர். இது

"விழுந்த ஞாயிறு எழுவதன் முன்மறை வேதியருடனாய்ந்து
எழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழுநூறே"

என்ற செய்யுளின் அடிகளால் விளங்குகிறது.

இதனல், கம்பர் பாரகாவியம் பாடவல்லபுலமையும் பேராற்றலும் வாய்ந்த பெரியாரென்றும்; பேரறிவுபடைத்த புலவர் சிகாமணி யென்றும் அறியப்படுகின்றது.

கவி பாடுவதில் வல்லாராகிய கம்பர், தமிழ்ப்பாடுதற்கு மட்டும் கருதினரில்லை. கவியெழுதவிரும்பினர். அக்கவி

''புவியினுக் கணியாய் ஆன்ற பொருடந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச்
சான்றோர்]
கவியென''—அழகு பெற்றிருந்தது.

(பொருள்) பூமியிலுள்ளவர்களுக்கு அலங்காரம் ஆகி அமைந்த சதுர்வித புருஷார்த்தங்களையும் கொடுத்து, அறிவினதாகி, தேவருணவினையொத்த அகப்பொருட்டுறைகளைக் கொண்டு, ஐவகை நிலத்தின் மார்க்கத்தினைக் கலந்து, மனம் ஒளிபெறத் தெளிந்து தண்ணளிபூண்டு, அந்தந்த வருண நிலைகட்கு ஏற்ற ஒழுக்கமும் தழுவிய சான்றோருடைய கவியைப்போன்றதென்பது.

பாடும் புலவன் சொற்களை மட்டும் ஆராய்ந்து சேர்ப்பான். மெய்ப்புலவரோ முதலில் விஷயங்களைத் தொகுத்துப்பின்னர் அவற்றை வகுத்து அதன்பிறகே விரித்துப் பதங்களைப்பிரயோகிப்பன். மெய்ப்புலவன் கவி இயற்றும்போது உயரிய பதங்கள் தானேவந்து ஏற்ற இடத்தில் அமையும். சந்தர்ப்பத்தையும் காலத்தையும் கருதாமல், கவி தனக்கு வேண்டிய காலத்தை வகுத்துக்கொண்டு துரித முயற்சி செய்தலே வேண்டற்பாலது, அவ்வகை முயற்சியில் முயன்று முடித்ததே 'கம்பராமாயணம்' எனும் காவியம்.

இவ்வரும் பெருங்காவியம் ஒரே நாளில் விரைந்த கதியில் பாடப்பட்டதென்று, நாமகளார் நல்வரப்பிரசாதங் காரணமாகக் கம்பர் தமது இராமாயணத்தை மிகவும் எளிதாக் அற்பகாலசாவ

காச்துள் அதாவது சில மணிநேரத்திற்குள் பாடி முடித்தன ரென்றும் சிலர் கூறுவர். அது தவறு. உரியகாலம் அனைத்தும் ஒருங்கே நிரம்பப் பெற்று, பக்குவகாலத்தில் பழுதறப்பழுத்த செழுங்கனியே கம்பராமாயணம் என்பதை அறிஞர்கள் உணர்தல் நேரிது.

புலவர் பெருமானாகிய கம்ப நாடர் தமிழிற் பாடிய கம்பராமாயணத்திற்கும், முனிபுங்கவராகிய வால்மீகர் வடமொழியில் யாத்த வால்மீகி ராமாயணத்திற்கும் பல்வேறு வகையில் சில வேறுபாடுகள் இருக்கின்றன. அவை விரிக்கிற் பெருகும் என்றஞ்சி இங்கு விடப்பட்டன.

கவி பாடுவதில் வல்ல கம்பர், தமது அரிய கலைகளை இராமாயணம் என்னும் இதிகாசத்தில் அற்புதமாய் அமைத்திருக்கின்றனர். அவற்றை இங்கு ஒரு சிறிது ஆராய்வாம்:—

கலையும்—அழகும்.

கம்ப ராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் மந்தரையாகிய கூனியால் மனது கலைக்கப்பட்டபொழுது கேகயன் புதல்வியாகிய 'கைகேயி' அடைந்த நிலையின் குணங்களை மொழியும் பகுதி, உலகிலுள்ள பல்வேறு மொழிகளில் வல்ல கவி சிரேஷ்டர்களில் கம்பரே முதல் வைத்தெண்ணக்கூடிய பெருமையுடையவர் எனக் காட்டும். இவரது கவிகளில் சூழ்ச்சியின் தூண்டுதல்கள் படிப்படியாகக் கிளம்பி உயர்கின்றது. ஒவ்வொரு படியும் 'கருமமே கண்ணாயினார்' செய்கையில் அழுந்தி, இறுதியில் மாந்திரீகத்தினால் கட்டுண்டு வெற்றி பெறுகின்றவனைப்போல் வெற்றிபெறுகின்றது.

ஸ்ரீராமன் இளமைப் பருவத்தனாயிருக்கையில், பிள்ளை விளையாட்டில் அம்பெய்தனர். அது கூனியின் முதுகிற்பட்டுப் புண்ணுண்டாக்கிற்று. வருத்தம் பொறுத அவள் பழிக்குப்பழி வாங்கும் பொருட்டுக் காலத்தின் வரவை எதிர்பார்த்துத் தசரதரின் தவப்புதல்வனாகிய ஸ்ரீராமனுக்குத் தீங்கிழைக்க வெண்ணியிருந்தாள். அந்நினைவே மந்தரை கைகேயியினிடம் செல்வதற்கு ஏதுவாயிருந்தது. நூலின் போக்கில் யாதோர் நினைவும் காரணமும் கூனி

மொழிவதில் காணப்படவில்லை. இராஜ பெருமாட்டிக்கு நன்மை செய்யும் நோக்கத்துடன் ஒவ்வொன்றும் கூனியால் கூறப்படுவதாகக்காண்கின்றது. இவ்வகைச் சாதுர்யமான தூண்டுதல் வெகு நாகரீகத்துடன் உள்ளுறைப்பொருளாக வைத்து கம்பர் மொழிந்திருப்பது எத்துணை அழகும், வியப்பும் சிறப்புமாக விளங்குகின்றது.

இராமபிரான் இளவரசுப் பட்டாபிஷேகத்தின் செய்தியைக் கூறவந்த கூனியை, தொடக்கத்தில் கைகேயி அழகில்லாதவளென்றும், நாகரீகமற்ற முரட்டுக்கிழவியென்றும், அறிவிலியென்றும், பேதையென்றும் பலவாறு வைதும், ஏசியும் "இராமனைப்பயந்த வெற்கு இடருண்டோ?" என்று கூறியவள், பிறகு கல்லினும்வலிய கடின மனம் படைத்து, "பூவுதிர்ந்ததோர் கொம்பெனப் புவிமிசை புரண்டாளாகி" அரசர் பெருமானாகிய தசரதரின் நீதி செறிந்த உருக்கமொழிகளையும், விநய வேண்டுகோளையும் ஒரு பொருட்படுத்தாது அறவே புறக்கணித்தாளென்னில், மனங்கரைக்கும் வல்லமையில் தேர்ச்சிபெற்ற மந்தரையின் ஸ்திரீ சாகஸம் எத்துணை சமர்த்துடையதாகக் காண்கின்றது.

இத்தகைய விநய பாகங்களைக் கம்பர் நுனித்தறிந்து அழகான மொழிகளில் வெகு நயம் பெறக்கூறும் அதிசயமே! அதிசயம்!

ஓசையும்—நடையும்.

ஓசையும் புத்தியும் ஒன்றுபட்டு லயிக்கச் செய்வதில் கம்பரின் அரிய செய்யுட்கள் வெகு நுட்பமுடையன. அத்துடன் இன்னோசையும், மிடுக்கும், பெருமிதமும் வாய்ந்து வெகு அழகுடன் விளங்குகின்றன. அவற்றின் அருமை பெருமைகளைச் சிறிது இங்கு விளக்குவாம்.

"தோகைய ரின்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட உம்பர் உவப்ப
மாக மடங்கலும் மால்விடை யும்பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தான்."

— (பா. கா. கார்முகப்படலம் 32)

சிவதனுசை வளைப்பதற்காக ஸ்ரீராமன் அவையினின்றெழுந்து நடந்த நடையழகை வருணிக்கின்ற இந்தச் செய்யுள், அப்பெருமாள் அழகாகவும், கம்பீரமாகவும் நடந்த நடை எத்தகையதென்பது நம்மனத்திற்குப் படுமாறு அந்நடைபோலவே இனிய சந்தத்தோடு முடுகி நடப்பது காண்க

இக்கவியின் நடைப் போக்கைக்கொண்டே இராமனது மனதின்கண சீதைபாலிருக்கும் வேட்கையால் வில்லை வளைக்க அவசரப்பட்டு விரைந்த கதியில் நடந்ததைக் காணலாம். கலி விருத்தமும், ஒவ்வோரடியிலும் ஈற்றடிச்சீர், மாச்சீராய், மற்றய கூவிளமாயிருப்பதும், நாவிற்குத் தட்டுதலின்றி ஆற்றொழுக்காய் வல்லினச் சக்தியின்றி அமைதலும், ஈற்றடி வில்லை அணுக அணுக வேகம் மிகுதலையும் குறிக்க, ஒரே ஒழுங்காய் வழுக்கிப் போதலையுங் காண்க.

"மாகந்தமு மகரந்தமு மளகந்தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னோடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா."

— (அயோ. கா. கங்கைப்படலம் 4)

'இளம்பிறையொத்த நுதலையுடைய சீதையொடு ஸ்ரீராமன், மேகம் வில்லேந்தித் தனியாக வருவதுபோலவும், பூணையணிந்த ஆண்களிறு தன் பிடியுடனே நடந்து வருவது போலவும் வந்தான்' என மொழியும் செய்யுள், அந்நடையழகை அங்ஙனமே விளக்கிக் காட்டுகின்றதன்றோ!

ஒருவர்க்கு மேலுள்ளார் ஒன்று கூடி நடக்கும் பான்மை சந்தத்தால் பெறப்படுகின்றது. ஒருவரது வேகம் மற்றவர்க்கு இல்லாத காரணத்தால், இருவரும் ஒரு பொதுநடை நேர்தலை இச்சந்தங் குறிக்கின்றது போலும்.

சினமும்—வீரமும்.

" அஞ்சன வண்ணனென் னுயிர் நாயகனளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே

செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உய்ஞ்சிவர் போய்விடி னுய்க்குக னென்றெனை யோதாரோ.''

— (அ. கா. குகப்படலம் 14)

தனது தமையனாரைக் காணவரும் பரதனை ஸ்ரீராம விரோதி என்று கருதிக் கோபங்கொண்டெழுந்த வேடுவர் தலைவனாகிய '**குகன்**' கூறுவதாகிய இச்செய்யுள், கூறும் போதே கோபக்குறிப்புத் தோன்றுமாறு அமைந்திருத்தல் காண்க.

''ஆழநெடும் புனல் கங்கை கடந்திவர் போவாரோ
வேழநெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடனிறந்தில னென்றெனை யேசாரோ.''

— (அ. கா. குகப்படலம் 15)

கங்கையின் ஆழத்தைப் பகைவர்கள் கடக்கமுடியாத செய்தியும், கூட்டமுள்ள யானைப் படைக்கஞ்சாத் தீரத்தையும், ஸ்ரீராமன் தன்னையும் தோழனென்று சொல்லிய அருமையையும், தனது உயிரிருக்கும் வரை விரோதிகள் வெற்றிபெற இயலாதென்பதையும் விளக்கும் இச்செய்யுள், எவ்வளவு அழகாயமைந்து குகன் கூறும் வீரமொழி அப்படியே படிப்பவர்க்குப் புலனாகும்படி விளங்கவுரைக்கும் செய்யுளோசை சிறந்து நிற்றல் காண்க.

'வேழநெடும் படை.........வில்லாளோ!' என்ற சொற்றொடரானது, தன ஆண்மையைக் குறிப்பதற்கேற்ற சொல்லாகவும், சொன்னயமும் பொருந்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. அன்றியும், நெடிய, கடந்து, படை கண்டு, என்ற சொற்களின் பிரயோகம், குகனது ஆற்றலை விளக்குவதாயுள்ளன. அன்பைக் குறிப்பதாயுள்ள அடுத்த அடியின் அழகிய சொல், மென்மைத் தன்மையதாம் அன்பின் இனிமையும், காப்பும் தோன்ற ழ, ய, ல, என்னும் எழுத்துக்களை வல்லினத்தோடு பிறழ வைத்திருப்பதும் போற்றற்பாலதாம்.

கவியின் கதி.

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவமனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீரடியளாகி
யஞ்சொலின மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்."

— (ஆ. கா. சூர்ப்பணகைப் படலம் 31)

ஸ்ரீராமபிரானது திருமேனியின் சௌந்திரத்தில் ஈடுபட்டு அவனை எப்படியாவது அணையவேண்டுமென்று கருதிய சூர்ப்பணகை தனது கோரமான வடிவத்தை யொழித்து, அழகிய ஓர் வடிவு பூண்டு சர்வாபரண பூஷிதையாய், மினுக்குங் குலுக்குமாக அந்தரத்திலிருந்து பூமியில் இரங்கிவந்ததைக் கூறுகின்ற இப்பாடல், எவ்வளவு அழகாக நடக்கிறதென்பதைக் காண்க.

கவியின் கதி, நடையின் கதியைக் குறிக்கின்றது. வஞ்சமனத்தினளாதலால் மந்த கதியாய் வருகின்றனள்.

மூர்க்கத்தோற்றம்.

"சிலம்புகள் சிலம்பிடை செறிந்த கழலோடு
நிலம்புக மிதித்தன ளொழித்த குழிவேலைச்
சலம்புக வளற்றரு கணந்தகனு மஞ்சி
பிலம்புக நிலக்கரிகள் பின்றொடர வந்தாள்."

— (பா. கா. தாடகை வதைப்படலம்)

விச்வாமித்திர முனிவரைப் பின்தொடர்ந்து செல்லும் ஸ்ரீராமனைக் காண்டலும், தாடகை கோபத்தோடு எதிர்த்துவந்து பயமூட்டுகின்ற மூர்க்கத்தன்மையுள்ள தோற்றத்தை விளக்கும் இப்பாசுரம், அரக்கியர்களுக்கு இயற்கையாயுள்ள துஷ்ட சுபாவத்தைக் காட்டுகின்றதன்றோ!

இதில் "சிலம்புகள் சிலம்ப" என்று இரட்டித்து மெல்லோசை கலந்த துள்ளலோசை தரவந்த சிலம்பின் 'கல்' என்னும் ஓசையைக் குறிக்கின்றது. இவ்வோசை இடையிடை கேட்பதெனத்

தோன்ற எதுகைச் சீர்களாமாறும், மற்றைச் சீர்கள் இடையில் வல்லினம் இரட்டித்தும், அவ்வினங்கலந்து வருதலும், கருவிளங் காய்த் தேமாச் சந்தமும், பாதங்களைப் பூமியதிர அழுத்திவைக்கும் குறிப்பையுந் தெரிக்குமாறுங் காண்க.

ஓசைத்திறம்.

"நீர்தரும் புனலிடை நிவந்த தாமரை
யேய்ந்த தன் கோயிலே யெய்துவாளெனப்
பாய்ந்தனள் பாய்தலும் பாலின் பஞ்செனத்
தீய்ந்ததவ் வெரியவள் கற்பின் றீயினால்."

— (யு. கா. மீட்சிப்படலம் 85)

கற்பின் பரிசோதனைக்காக மூட்டப்பட்ட எரியில், சீதை பாய்ந்து தனது கற்பின் தூய்மையால் அவ்வக்கினியைத் தணிவித் ததைக் காட்டும் இச்செய்யுள், படிப்பவர்க்கு அவ்வாறே தோன்றும் படி அமைந்துள்ள ஓசைத்திறம் கூர்ந்து கவனித்தறிக.

சீதை தீப்பாயும் போது அவள் மனத்தின்கண் ஒரு தடையும் அற்றவளாய், ஒரே மனதாய் எரியில் பாய்ந்தனள் என்பதும், கலப் பற்ற மனமும், கற்புடைமையும் காட்டுவதான 'யேய், கோய், எய், பாய்' என்னுஞ் சொற்களைப் பிரயோகித்திருத்தலையுங் காண்க.

வீரவாதம்.

"விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்ஞையர் நாகர் மற்றும்
எண்ணாட்டவர் யாவரு நிற்கவோர் மூவராகி
மண்ணாட்டவர் காட்டுநர் வீட்டுநர் வந்தபோதும்
பெண்ணாட்ட மொட்டேனினிப் பேருலகத்துளண்ணா."

தர்ம ஸ்தாபனத்தின் பொருட்டுத்தடையாக எதுவரினும் ஓர் பொருட்படுத்தாது எதிர்த்து நின்று வெற்றிபெருவதென்றும் உறுதிமேற்கொண்டுள்ள இலட்சுமணர் மொழிவதான இச்செய் யுள், வீரவாதங்கள் நிரம்பித் தமைபன் பாலுள்ள கரையற்ற அன் பின் மிகுதியால் பொங்கிப் பகைவரை அழிக்கவல்ல' ஆற்றல் பொ

திந்துள்ள சொன் மிகுதியாகத் தோன்றுதல் காண்க. வெகுளியின் தோற்றத்தை வல்லினப் பிரயோகத்தால் விளக்கியிருப்பது வெளிப் படை.

மிடுக்கு.

''உண்ட நெருப்பைக் கண்டனர் பற்றிக்
கொண்டணை கென்றானண்டரை வென்றான்.''
— (சு. கா. இலங்கையெறியூட்டு படலம்)

நெடுங்காலம் கேடின்றிப் பாதுகாக்கப்பட்ட இலங்கைமா நக ரம் நெருப்புக்கு இரையாய்ச் சேதப்பட்டு அழிவதைக் காணப் பொறாத இராவணன், அந்நெருப்பிற்குரிய அக்கினி தேவனை உட னே பிடித்து வந்து தன் எதிரே விடும்படி தனது ஊழியர்களுக்கு உத்திரவிடுவதான இச்செய்யுள், மிடுக்கான தோரணையுடன் ஓசைக் கேற்றபடி தாளத்திற்கு ஒத்து கவிச்சுவையை அறிவிக்கின்ற தன்றோ ?

இரக்கம்.

''கானாள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக்
காதலுப் பின்பு
போனானு மொருதம்பி; போனவர்கள் வருமவதி
போயிற் றென்றா
வானாத வுயிர்விட வென்றமைவானு மொருதம்பி;
அயலே நாணாது
யானு மிவ்வரசாள் வேனென்னே ! யிவ்வரசாட்சி
யினிதே யம்மா !''

ஸ்ரீராமன் குறித்த கால அளவிற்குள் வராததற்குப் பெரிதும் வருந்திய பரதாழ்வான், தனது இளவலாகிய சத்துருக்கனனை அரசு செய்யும்படி செங்கோலை அவனிடம் ஒப்புவித்துத் தீப்பாயத் துணிந்து நிற்பதைக்கண்ட சத்துருக்கனன் மிக வருந்தித் தனக்கு நேர்ந்த கொடுமையைப்பற்றி வியந்து கூறும் இப்பாடல், எவ்வ ளவு இரக்கமும், உருக்கமும் வாய்ந்து, வாழ்வில் அலட்சியமும்,

விருப்பம் இன்மையும் காட்டுதல் காண்க. இனி, இரகுவீரனைக் கண்டு பட்டாபிஷேகமும் நடைபெறும்.

இவ்வகையில் இதுபோன்ற செய்யுட்கள் இன்னும் பலவுள. விரிவஞ்சி விடப்பட்டன.

திருவழுந்தூர் வள்ளல் திருவடி வாழ்க.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

கம்பர் திருநாட் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் 16-3-38உ புதன்கிழமை பங்குனி உத்திரத்தன்று மாலை 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி தெள்ளியசிங்கப் பெருமாள் கோயில் தெருவிலுள்ள தவன உத்ஸவ பங்களாவில் கம்பர் திருநாட்கொண்டாட்டம் ஆரம்பமாகியது.

திருவல்லிக்கேணி திவ்ய தேசத்து எம்பெருமான்கள் தவன உத்ஸவம் நடைபெறுவதற்காக வழக்கத்தைக் காட்டிலும் அதிவிமரிசையாகப் போடப்பட்டிருந்த பந்தற்கீழ் சென்னையின் பல்வேறிடங்களிலிருந்து வந்திருந்த தமிழரும், தமிழன்பரும் வெகு அழகாக அமர்ந்திருந்தனர். மேடைமேலும், படிக்கட்டுகளிலும், கடல்மணற் பரப்பியிருந்த முன் வெளியிலும் ஆடவர் அமைதியாக வீற்றிருக்க, மேடைப்பின்புறம், கட்டிடத்திற்குள் பெண்மணிகள் அணிவகுத்து உட்கார்ந்திருக்கக் கண்டவர் இஃது இந்திரனது சபையோவென ஐயமடையாமலிருக்க முடியாது. மாவிலைத் தோரணங்கள் பலவிடங்களிற்றிகழ, விமானத்தில் மின்சார விளக்குகள் பலவர்ண வெளிச்சத்துடன் விளங்க, மங்கள கீதம் முழங்க, பங்களா முற்றும் அதிரமணீயமாகப் பொலிந்து நின்றது.

அன்று சபைத்தலைவர் வருமளவும் காரியதரிசி பிரார்த்தனைக்

இணங்கி சீகாழிச்சீராம விண்ணகரம் ஸ்ரீ உபவே கம்பராமாயணம் ஆர். சந்தான கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி பாலகாண்டம் முதல் உயுத்தகாண்டம் ஈறுகவுள்ள காண்டங்களினின்று தேர்ந்தெடுத்த கம்பராமாயணப் பாசுரங்கள் பலவற்றை முறையாக இன்னிசையுடன் இனிய குரலில் தாள லயத்துடன் சந்தர்ப்பக் குறிப்புகளுடன் கேட்டவர் மனமுருகிக் களிக்குமாறு நன்கு பாடினுர். இதற்குள் தலைவரவர்களும் வந்துவிட்டனர்.

கடவுள் வாழ்த்து.

சங்கக் காரியதரிசி "அலங்கலிற்றேன்றம்"; 'ஆராதவருளமுதம்" என்ற இரு பாடல்களைக் கடவுள் வாழ்த்தாகப் பாடினுர்.

உபசார பத்திரம் வாசித்துக் கொடுத்தல்.

அடியிற்கண்ட உபசார பத்திரத்தை சங்கத்தலைவர் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் படித்துக்கொடுத்து சென்னை கவர்ன்மெண்டு பிளீடர் ஸ்ரீமான் கே. யஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்களை அன்று கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ :

ஸ்ரீமதேராமாநுஜாய நம :

உபசார பத்திரம்.

——:o:——

விமல வகுலதாமா விஸ்த்ருத ப்ரஹ்மதாமா
நிகமசிகரஸீமா நித்யநிஸ்ஸீமபூமா|
அஜஹதநுஜிக்ருக்ஷா துக்ஷிதஸ்ஸங்நிதத்தாம்
ரகுவர சரணச்ரீ : காரிஜ : பாரிஜாத :||

உச்சைஸ்ஸ்வச்சச்சடரி புநபர்யுங்மிஷத் ப்ரஹ்மசக்ஷு—
ச்ரேயச்ரீமாநக்ருதக கிராம்ஸ்தோமச : ஸ்தேமலக்ஷ்மீ :|

நாதாச்லேஷஸ்வஜகத ஜஹந்நாதபாதாநுவாத :
அந்தந்நிந்தேதருணதுளஸீகர்ப்ப புஷ்பந்தயச்ரீ :||

கம்பத்திடைத்தோன்றுமாலாய கம்பன்
தம்பத்திமைக்கோரிலக்காய கம்பன்
நம்பத்தனென்றோது சம்பத்தரும்பக்
கம்பத்தடிக்கந்த கம்பன் மலர்ந்தான்.

தாவும் திருச்செந்தமிழ்ச் செல்வர்தாங்கும்
யாவும் தனக்காகவாகும் கவிச்சீர்
மேவும் திருச்சக்கரத்தேறுதேவுக்
கேவும் சிரக்கம்பநங் கம்பனென்பான்.

சோழவள நாடு பெற்ற அந்தணச் செல்வமே!

கல்வியிற் பெரியார் என்றும், கவிச்சக்ரவர்த்தி என்றும் தனிப் புகழ்வாய்ந்த கம்ப நாட்டாழ்வாரது திருநாட்கொண்டாட்டம் பங்குனி உத்தரம் தோறும் இச்சங்கத்தாரால் நிகழ்த்தப்பெற்று வருவது தமிழுலகு நன்கறிந்ததே. மஹா விஷ்ணுவாகும் அக்கம்பர் வ்யாபகமாகும் பரவுருவம் தன்னையும் வ்யாப்யமாக்கித் தமதரியுருவொன்றே வ்யாபகமாக வளர்ந்து விளங்குவதுபோல், இக்கம்பர் தாமும் அன்னவர் திருவருளால் தமிழெனும் அளப்பரும் சலதியை வ்யாப்யமாக்கி இன்னமுதத்தமதரும் தமிழையே வ்யாபகமாக விரித்துள்ளாராதலின் தமிழ்ப்பெருஞ் செல்வர்கட்கு இவரே சக்ரவர்த்தி ஆவர். 'அண்ணல் அல்லவை எல்லாம் ஒத்தான்' என்ற வாச்சியத்துக்கு இவரிசைத்த உவமை இவரது வாசகத்துக்கும் இசைதல் இங்கண் குறிப்பிடத்தக்கது. இத்தகைய நங்கவிச் சக்ரவர்த்தியின் திருநாளைத் தமிழ் நல்லார் நன்கு கொண்டாடும் கடன்பட்டே பிறந்துள்ளார்கள். வடமொழிப் பயிற்சியும், செந்தமிழ்ப் பயிற்சியும் தற்போது குன்றியும், திரிந்தும், இருத்தல் நோக்கி இவ்விருமொழியும் இருவிழிபோல் நன்கு செறிந்து, செழித்து விளங்குமாறு பெருமுயற்சி செய்யவேண்டியது இன்றியமையாததாயிற்று. உலகியலும், கால நிலையும் கண்டு, உள்ளவாறு கற்று, தக்கவாறு ஒழுகி, உலகத்து நல்லுணர்வும், நல்லன்பும், நிகழச்செய்தல் நமக்கு வகுத்ததோர் கடனேயாகும்.

இக்கருத்தால் நிகழ்த்தப்பெற்று வரும் நங்கம்பர் திருவிழாவுக்கு இவ்வாண்டுத்தலைமை வகித்து நன்கு சிறப்பித்து நடத்திவைக்குமாறு வேண்டிக்கொண்ட எமது விருப்பத்தைப் பூர்த்திசெய்து தாங்கள் இங்கு எழுந்தருளியது தங்கள் நல்லுணர்வையும், தமிழன்பையும் நன்கு யாப்புறுத்தும். செந்தமிழ்க் கடவுள் என்ற தனிச்சிறப்புவாய்ந்த ஆராவமுதன் திருவடிவாரத்தே பிறக்கும் பெரும்பேறு பெற்றுள்ள தங்களுக்கு செந்தமிழ் தாங்கும் தகவு இயல்பேயாகும். திருக்குடந்தைப் பெருமான் திருவருளால் சடகோபர் சேவடியும் வாய்மொழியும் ஒக்கவே யோகு செழிக்க நாதமுனிகட்குக்கண்கூடாகியதும், அந்நாதமுனிகள் திருவருளுக்கு நம்கம்பர் உற்ற ஓரிலக்காகித் தமிழ்க்கோனடாத்தும் கவிச்சக்ரவர்த்தியாய் விளங்காநிற்றலும் ஆராவமுதனே செந்தமிழ் காக்கும் பெருந்தேவு என்றதற்குத் தக்கதோர் தனிச்சான்றாகும். கம்பரும் நாதமுனிகளும், சடகோபரும், குடந்தைக்கிடந்த எம்பெருமான் இன்னருளின் பரம்பரை என்றது ஆன்றோர் மரபு. ஆகலின் நம் கவிச்சக்ரவர்த்தியின் திருநாட்கொண்டாட்டத்தைத்தாங்கள் தலைமைவகித்து நடத்திவைத்தல் பெரிதும் அன்னவனுக்கு உவப்பேயாகும். வான்மீகியிடத்தும், ஆழ்வாரிடத்தும் தங்கள் பத்திமையும், முராரியிடத்தும் கம்பரிடத்தும் தங்கள் அருமைப்பாடும் ஒப்புயர்வற்றதென்றதை நாங்கள் நன்கறிவோம். தங்கள் வரவு நல்வரவாகுக. இருமொழிப்புலமையும், கம்பர் பெருமையும் மேன்மேலும் செழித்தோங்குக. ஸர்வம் சுபம்.

முழுதுணர்வழுதி நாடர்முகமலர்ந்தருளியுள்ளத்
தெழுதுமாறுதயமாகும் அமுதமே யனையசெஞ்சொல்
தழுவுமாறணியழுந்தூர் அழகனுரெழில் பரந்தே
மழையெனப் பொழியவன்னூர் தமிழெனக்குழைந்தான்!

கம்பன்.

பவியெனப்பிறர் நடுங்கக்கவியெனத்தமர்களிக்க
அவியெனத்தனதடிக்கே அரிமுகனுரிமை கொள்ளக்
குவியகற்கரங்களெங்கும் முடிமிசைக் கம்பனென்றே
நவிலநின்றநிலமாளும் கவிகளுக்கிறைவன் வாழி.

வேதோத்தம்ஸ விஹாரஸாரதி தயாஸம்பாரகம்பீரவாக்
தாரோதாரமஹாவதார மஹிமச்ரீமத்சடாரேர்முநே :|
திவ்யாபாங்கதரங்க மங்கல ஜயஸ்தம்பாக்யஸம்பாவக :
கோப்யுச்சை : கவிசக்ரவர்த்தி பதவீமாஸேதிவாந்தீவ்யதி||.

— திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தார்.

இப்பிரேரணையை ஆமோதித்து சங்க உபதலைவர் பகவத் விஷயம் அட்வோகேட் ஸ்ரீ உபவே ஸ்ரீ. நரஸிம்மாசாரியார் பேசுகையில், கூரத்தாழ்வான் போன்று கம்பநாட்டாழ்வான் ஸ்ரீ வைஷ்ணவர்களாற் கொண்டாடப்பட்டவரென்றும், நாலாயிர திவ்யப்ரபந்தங்களில் இவரது பாக்கள் சேர்க்கப்பட்டு எங்கும் ஸேவிக்கப்படுவதினாலேயே இவர் பெருமை நன்குவிளங்குமென்றும், இவர் பாடிய சடகோபரந்தாதிப் பாசுரங்களை இன்றும் ஆழ்வார் திருநகரியில் சந்திப்பு உத்ஸவாதிகளில் ஸேவிக்கக் காண்கிறோமென்றும், கம்பநாட்டாழ்வார் திருநாட்கொண்டாட்டத்துக்குத் தலைமை வஹிக்க லௌகிக வைதிகர்களிற் சிறந்த ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்களே தகுதியானவரென்றும், அவர் தலைமை வஹிக்குமாறு தானும் கேட்டுக்கொள்வதாயும் கூறினர். அய்யங்காரவர்களும் அதற்கிணங்கி அவைத்தலைமை வஹித்தார்.

வாழ்த்துப் பாக்கள் வாசித்தல்.

ஸ்ரீ அநந்தகிருஷ்ணய்யங்கார், ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்வான், தென்திருப்பேரை, அவர்களால் அனுப்பப்பட்டிருந்த கீழ்க்கண்ட சுலோகத்தை சங்கத்தலைவர் ஸ்ரீமான் கேசவய்யங்காரவர்கள் வாசித்தார்கள்.

ச்ரீமத்கைரவிணீஸமுல்ல ஸதிதம் ச்ரீத்ராமிடாலங்க்ருதம்
க்ருஷ்ணஸ்வாமி சிரஸ்கதுங்கஸுமநோப்ருந்தப்ரமோதோதயம்|
வித்யாம்போதி ந்ருஸிம்ஹஸூரிஸுகலாநாதஸ்யகோபிர்லஸத்
ச்ரீமத்கேஸரிதேவ பூர்ணக்ருபயாஜீயாத்ஸதஸ்ஸர்வதா||

புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ நா. கனகராஜய்யரவர்களுடைய கீழ்வரும் பாக்களை சங்கக்

காரியதரிசி பாடினர்.

ஸ்ரீ :

கம்பர் திருநாள் மங்கள வாழ்த்து.

———:(o):———

தமிழ்தழுவு மிராமபிரான் றிருச்சரிதை
விருத்தநெறி தழைக்கச் செய்தான்
அமிழ்துறழுமொழிவள நன்கமைந்தபுகழ்க்
கம்பநாட்டாழ்வானன்னேன்.
உமிழ்கவிதைச் சுவையுணரும் பேறுபெறத்
தமிழகத்திலுதிக்கப்பெற்றோம்
இமிழ்கடலினளப்பரிய தமிழ்க்கடலிற்
றிளைத்துமகிழ் இயைபுபூண்டே. (1)

பிறந்தநாட்டிற்றாய் மொழியிற்
பெரிதுமுள்ள முருகிநிற்கும்
சிறந்தவன்பு கொளுங்கம்பர்
திருநாள் புலவர் நிகழ்த்துமது
நிறைந்தவொளி கொளாதித்தன்
நிலையையுணரவுடுவினங்கள்
குறைந்தவொளியோடெதிரணைந்து
குழுமுமியல்பை நிகர்த்திடுமே. (2)

கதிரொடுமதியமவனருகொளிரா
கவினுறு தாரகைபிறழா
துதிபெறுதடித்து மொளியுளவாகா
சூழ்வுறு கனலியுமழுங்கும்
எதனினு மொளியா விலங்குமவ்விறைவன்
எற்கெனத்திருவிளக்கெடுக்கும்
அதனையே நிகர்ப்பக்கம்பராம்புலவர்க்
கமைவுறு விழவயர்ந்திடுவாம். (3)

சென்னிநாட்டினர் செய்த தவப்பயன்
பொன்னி நன்னதி பூண்டபெரும்புகழ்

உன்னியோதலுமுள்ள முருக்குநம்
கன்னிபைந்தமிழ் கம்பர் மணந்ததே. (4)

நாடத்தக்கது பரம்பொருளிருகழல் நளினம்
தேடத்தக்கது பிறக்கறமுயல்வுறு சிறப்பே
நீடத்தக்கது தாய்த்தமிழ்ப்பயில்வுறு நிலையே
பாடத்தக்கது கம்பராம்பாவலர் பனுவல். (5)

மனமுற வாழ்த்தவும் போற்றவும் தேற்றவும் மாதவன்றன்
புனமுறுதண்டுளவேறிய பூம்பதப்போதுளவே
இனமுறு துன்பமுமின்பமு மெய்தியிரங்குகின்றீர்
கனமுறு மேனியன் மெய்ப்புகழ் கம்பர்கழறினரே. (6)

செங்கமல மங்கைவெண்கமலமங்கை
திண்டிறல்கொள் மங்கை—யென்ற மூவர்
சிந்தையினமர்ந்து சந்ததம் விளங்கு
செந்தமிழ்பயின்ற—கம்பநாடர்
மங்களமிகுந்த செங்கணரியெந்தை
வண்கழல்கள் நெஞ்சில்—நின்றுலாவ
வண்டுபடிகின்ற தண்டுளவமொன்ற
வன்கவிதை தந்து—கொண்டவாழ்வு
பொங்குபுகழ்கொண்டதொண்டினை நினைந்து
புந்தியின் மகிழ்ந்து—சந்தமேவு
பொன்றமிழ் புனைந்து கம்பரை நினைந்து
புங்கமுற நன்கு—மண்டுவோமே.
அங்கலுழுமும் பர்விண்டல நிறைந்த
அண்டரொடு சென்று—மிண்டர்வாட
அன்றுகளநின்றவென்றியரி செம்பொன்
அம்புயபதங்கள்—ஒன்றுவோமே.

வாழ்த்து.

வாழி சானகி வாழியிராகவன்
வாழி பைந்தமிழ் வாழி வடமொழி

வாழி மாதவர் வான்மிகர் கம்பரே
வாழி நல்லறம் வாழிய மெய்ம்மையே.

——:o:——

காரியதரிசி அறிக்கை.

பின்னர் காரியதரிசி பின்வரும் அறிக்கையை வாசித்தார் :—

ஸ்ரீ :

வழுவிலா வடிமை செய்வதையே தனக்கு வகுத்த பணியாகக் கொண்டு நற்றொண்டாற்றி வரும் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப்புத்தாண்டு தினம் பங்குனி உத்தரம். இஃதே கவிச்சக்ரவர்த்தி கம்பநாட்டாழ்வாரின் தினமுமாம். இப்புலவர் பெருமான் இன்றே திருவரங்கமெனத்திகழும் கோயிலில் அழகியசிங்கர் சிரக்கம்பம் பண்ணத் தமது இராமாயணத்தை அரங்கேற்றித் தமக்குரிய ஆழ்வார் ஈடுபாட்டைப் பிரகாசப்படுத்தினர்.

இச்சங்கத்தில் அவ்வப்போது நடைபெற்றுவரும் மஹோத்ஸவ வைபவங்கள் அவ்வக்காலங்களிலேயே பத்திரிகைகளில் வெளிவந்துள்ளபடியால் அவற்றை மறுபடியும் இங்குக் குறிப்பிடாமற் செல்கின்றேன். இவ்வருடம் ஆழ்வார், ஆசாரியாள், பெரியார் உத்ஸவங்கள் பத்துத்தினங்களுக்குக் குறையாமல் நடந்துவந்த விஷயம் அனைவரும் அறிகுவர்.

சங்கமகா வித்துவானுய்த்திகழ்ந்த ஸ்ரீ உபவே பண்டிதபூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்யஸ்வாமிஆசார்யன் திருவடிகளை அடைந்தது ஆற்றொணுத் துயரத்தில் நம்மை ஆழ்த்திவிட்டது. அம்மஹான் போன்ற உத்தமரை இனியாம் என்று காண்போம் ? அவரது இன்னருள்பெற்று உய்வோமாக.

சங்கக் காரியங்களை அன்புடன் வெளியிட்டுவரும் 'ஹிந்து'; 'மெட்ராஸ் மெயில்', 'சுதேசமித்திரன்'; 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'; 'தினமணி'; 'இந்து நேசன்'; 'ஆர்யதர்மம்'; 'ஸ்ரீராமாநுஜ சித்தாந்த வைஜயந்தி'; 'ஸ்ரீவேதாந்த தீபிகை' முதலிய பத்திரிகாதிகாரிகளுக்கு இச்சங்கத்தார் மிகவும் நன்றி பாராட்டுகின்றனர்.

சங்க உபதலைவரான ஸ்ரீ உ. வே. பகவத் விஷயம் அட்வொகேட் வி. நரஸிம்மாசார் 'ஸ்ரீபார்த்தசாரதி தேவஸ்தானம்' தர்மகர்த்தாவாகியதுபற்றியும், சங்கக்கமிட்டி மெம்பர்களான ஸ்ரீமான்கள் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார், யஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கட்டு முறையே 'ராவ் ஸாஹிப்'; 'ஆசார்யாஞ்ஞாரஸிகர்' என்ற பட்டங்கள் வழங்கப்பட்டதைக் குறித்தும் இச்சங்கத்தார் மிகுந்த குதூகலத்தை அடைந்துள்ளார்கள்.

இத்தமிழ்ச்சங்கம் வேண்டுவது ஒன்றே. பிராசீனத் தமிழை நன்கு பரிபாலித்துப் பரவச்செய்யுங்கள். ஒழுக்கம் விழுப்பந்தரலால் அஃதே மிகவும் வேண்டப்படுவது. பெரியாரைத் தக்கபடி போற்றுங்கள் சுருங்கக்கூறின் இவ்வையத்தைப் பூலோக வைகுந்தமாகச் செய்யுங்கள்.

கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையரால் நன்கு நடத்கப்பட்டுவரும் இச்சாது சங்கம் உலகிற்குப் பயன்படக்கூடிய முறையில் மாத வெளியீடாக 'வகுளமாலை' என்ற சிறந்ததோர் பத்திரிகையை நடத்தி வருவதும் அநேகர் அறிந்திருக்கலாம். இதில் அநேக அரிய விஷயங்கள் வெளிவருகின்றன. இஃது பல்லாண்டுகள் நம்மிடை நின்று பணி இயற்றுமாறு செய்யவேண்டுவது இங்குள்ளார் முதற்கடமையாகும். இச்சங்கத்தலைவர் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள் இம்மாலையின் ஆசிரியர். இவரது ஆற்றலையும், அன்பையும், பக்தியையும், தொண்டையும், அவாவையும், தாளாண்மையையும், யான் எடுத்துக்கூற வல்லனோ? ஆழ்வார் அருள்பெற்று மேன்மேலும் இவர் அரிய தொண்டியற்றி வருவாராக. போதிய உதவியின்றேல் இவர் எடுத்துக்கொண்டுள்ள சீரிய காரியங்கள் நிறைவேறுதல் இலகுவல்ல. அவருக்குப் பல துறைகளிலும் நாம் உற்சாகமூட்டி வேண்டியதைப் பெறுவோமாக. பல துளி பெருவெள்ளம். மனமிருந்தால் இடமுண்டு. இப்பத்திரிகைக்கு வருடச்சந்தா ஒரு ரூபாய்தான். இங்குள்ளாரனைவரும் தக்கபடி ஆதரிப்பின் தமிழ்த்தாய் முகமலர்ந்து இன்னருள் சுரந்து இனிது வீற்றிருப்பள். இதற்கு விஷயதானம் செய்துவரும் மஹான்களை இச்சங்கம் என்றும் பாராட்டும்.

கேட்பாரின்மையால் திருக்குறள், கம்பராமாயண வார வகுப்புகள் சிறிது காலமாக இங்கு நடைபெறவில்லை. சங்கம் ஊக்கத்தைக் கைவிடவில்லை. இராயப்பேட்டை வாசிகளின் வேண்டுகோட்கிணங்கி, மார்கழித்திங்கள் முப்பதுந்தப்பாமே திருப்பாவை காலக்ஷேபம் நடந்தது. வாராவாரம் அங்கு ஆழ்வார் அருளிச்செயல்கள் நடைபெறும். கூடிய சீக்கிரம் இராயப்பேட்டையில் இச்சங்கத்தின் கிளை நிறுவப்படும். அஃதும் பொருந்துநாள் நாளை என்றகணக்கிலே நாளையே நடைபெறும். இக்கொண்டாட்டம் தொடர்ந்து அங்கு நடைபெறும். இச்சங்கத் தலைவர் அங்கு தலைமை வஹிப்பார்.

இதுகாறும் இச்சங்கத்தின் முன்னேற்றத்துக்காக உழைத்து வந்த மஹான்களுக்கு சங்கத்தார் விசேஷ நன்றி பாராட்டுவதுடன் இனியும் இதாரும் அவ்வாறே செய்யுமாறு வேண்டப்படுகிறார்கள்.

செந்தமிழைத் தழைத்தோங்கச் செய்வதே நமக்கு ஆண்டவன் இட்டகட்டளை. கூடியிருந்து குளிர்தலே சீரியர் வேண்டுவது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

16—3—38 திருவல்லிக்கேணி.

மேல் சில வார்த்தைகள் கூறினர். இவ்வருடம் இக்கொண்டாட்டத்தை 'திருவழுந்தூர் வள்ளல் மலர்' என்ற பிரசுரவெளியீடாகவும் நடத்த உத்தேசித்திருக்கிறபடி பின்னர் 'வகுளமாலை'யில் அநேக அறிஞர் கட்டுரைகள் வெளிவரும். இதுகாறும் அடியிற்கண்ட வியாஸங்கள் வந்துள்ளன.

விஷயம்.	கட்டுரையாளர்.
1. செய்யுள் நிலை.	ஸ்ரீ உபவே. ஸ்ரீ அனந்தகிருஷ்ணையங்கார், ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான், தென்திருப்பேரை.
2. ஸ்ரீமத்கம்பராமாயணக் காப்புச் செய்யுளின் ஐயமுந், தெளிவும்.	புராணஸாகரம் பிரும்மஸ்ரீ வசிஷ்டபாரதியார்.

விஷயம்.	கட்டுரையாளர்.
3. கம்பர் கவி.	ஸ்ரீமான் யன். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்கள், அட்வோகேட், மதுரை.
4. கம்பர் உவமைகள்.	ஸ்ரீமான் நா. கனகராஜையரவர்கள், தமிழ் வித்வான், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
5. கம்பராமாயணக் கதிர்மணிக் கோவை. (இரண்டு பாகங்கள்)	ஸ்ரீமான் கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்.

—:o:—

1938—39 வருடத்துக்கு அடியிற்கண்டவர்கள் சங்க நிர்வாகிகளாகயிருக்க ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

தலைவர்.		ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.
உப தலைவர்கள்.	1.	ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
	2.	ராவ்ஸாஹிப் ஆர். இராமஸ்வாமி அய்யங்காரவர்கள்.
காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.		ப. ரெ. திருமலை அய்யங்காரவர்கள்.
கமிட்டி மெம்பர்கள்.	1.	ஸ்ரீமான் ஏ. வெங்கடாசாரியரவர்கள்.
	2. ,,	ஆர். சந்தானகிருஷ்ணையங்காரவர்கள்.
	3. ,,	டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
	4. ,,	யஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்கள்.
	5. ,,	யஸ். லக்ஷ்மீ நரஸிம்மாசாரியாரவர்கள்.
	6. ,,	வி. யன். சிங்காரவேலு முதலியாரவர்கள்
	7. ,,	வி. யம். ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
	8. ,,	யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
	9. ,,	சுந்தரசேகர நாயகரவர்கள்.
	10. ,,	இ. கே. சபாபதி முதலியாரவர்கள்
	11. ,,	வி. கே. பார்த்தசாரதி ஐயங்காரவர்கள்.

மாலையிடல்.

ஸ்ரீமான்கள் வி. நரஸிம்மாசாரியாரும், ஆர். கேசவய்யங்கார் வர்களும் பலத்த கரகோஷத்தினிடையே தலைவருக்கும் உபந்யாச கருக்கும் மாலையிட்டனர்.

தலைவர் முன்னுரை.

இவ்வரும்பெரும் கொண்டாட்டத்திற்கு சற்றே தாமதித்து வந்ததுபற்றி மன்னிக்கவேண்டும். கம்பர் கவிச்சக்ரவர்த்தி. உலகம்புகழும் உத்தமர். அவர் பெருமை தெரியாதார் ஒருவரும் இருக்கமுடியாது. அடியேனை அவரது திருநாட் கொண்டாட்டத் துக்குத்தலைமை வஹிக்கும்படி செய்த இச்சங்கத்தாருக்கு மிகவும் நன்றி பாராட்டுகிறேன். வித்வான் கொடவாசல் நரஸிம்மாசார் ஸ்வாமி சிறந்த பண்டிதர். அவரது உபந்யாசத்தை நாமெல்லாம் கேட்டு மகிழ்வோமாக.

உபந்யாசம்.

அவையோரெல்லாம் அமைதியுடன் அமர்ந்து ஆவலுடனி ருக்க ஸ்ரீஉபவே வித்யாரத்நாகரம் கொடைவாசல் நாஸிம்மாசார் ஸ்வாமி அதி அற்புதமாக வெகுகம்பீரத்துடன் கம்பரின் கருத்து என்ற விஷயம்பற்றி மிகவரியதோர் உபந்யாசம் செய்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—

இங்குள்ள சிறந்த பாகவதகோஷ்டியில் அடியேனை கம்பரின் கருத்து என்கிற விஷயத்தை உபந்யஸிக்கும்படி கேட்டுக்கொண்டிரு க்கிறார்கள். இது அகாதமான விஷயம். எண்ணுதற்கும் பே சுதற்கும் அரியது. சொல்லிப்பார்த்து திருப்திபெறாமல் திரும்பி நிற்கவேண்டியது. சங்கக்காரியதரிசி 'போன் மூலம்' என்னிடம் இது விஷயமாகப்பேசி கம்பரின் கருத்து உபந்யஸிக்க வேண்டுமெ ன்றார். பின்னரும் அனுப்பிய கடிதத்தில் 'கம்பரின்(இன்) கருத்து' என்றும் குறிப்பிட்டிருந்தது. இத்தொடரில் கம்பர், இன், கருத்து என்ற மூன்று பதங்கள் உள்ளன. இனிமை தான் எவரும் வேண்

டுவது. சாஸ்திரங்களுக்கும், காவியங்களுக்கும் விசேஷவாசியுண்டு. தமிழ்க் காவியங்களுக்கு விசேஷ பெருமையுள்ளது. கீர்வாண பாஷையில் உபநிஷத்துக்கள் போலவே திராவிட பாஷையில் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள். வடமொழி சற்று பயங்கரமாகவே தோற்றும். தமிழுக்கு இனிமை அதிகம்.

"அரவத்த மளியிஞேடும் அழகியபாற்கடலோடும்
அரவிந்தப் பாவையுநதானும் அகம்படிவந்து புகுந்து
பரவைத் திரைபலமோதப் பள்ளிகொள்கின்ற பிரானே
பரவுகின்ருன் விட்டுசித்தன் பட்டினம் காவற்பொருட்டே."

என்ற ஆழ்வார் பாசுரம் எவ்வளவு இனிமையாக அர்த்தகர்ப்பிதமாக அமைந்திருக்கிறது பாருங்கள். அவன வரும்போது மெத்தை, கட்டில், மனைவியுடன் வந்தான் என்பதை எவ்வளவு அழகாகப்பேசுகிருர் கவனியுங்கள். இப்பாவத்தையே,

"பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்துஎன்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாளநம்பீ!
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே என்றென்று
உனக்கிடமாயிருக்க என்னை உனக்கு உரித்தாக்கினையே"

என்றுமிவர் கூறுதல்காண்க. கற்பாரிராமபிரானை யல்லால் மற்றுங்கற்பரோ?

"மண்மிசையோனிகள் தோறும்பிறந்து எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா உலகோர்களெல்லாம்
அண்ணலிராமாநுஜன் வந்துதோன்றிய அப்பொழுதே
நண்ணருஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே."

என்றபடியானவர் அநேகர்.

கம்பர் கவி அனைத்தும் இன்பம்நல்கும். எதைஎடுப்பது, எதை விடுவதுஎன்பது அசாத்தியமான காரியம். ஏதோ சிலவற்றை இங்கு விண்ணப்பித்துக்கொள்கிறேன்

அநுமான் தன் வரலாறு கூறுவதாகக்கம்பர்;

"மஞ்செனத்திரண்ட கோலமேனிய மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத்தகையவாகி நளிரிரும் பனிக்குத்தேம்பாக்

கஞ்சமொத்தலர்ந்த செய்யகண்ணயான் காற்றின்வேந்தற்
கஞ்சனை வயிற்றில் வந்தேனுமமுமநுமனென்றான்.''

எனக்கூறும் அழகைக் கவனிக்கவேண்டும்.

எம்பெருமானது நீலமேகச்யாமளரூபம் சரண்யரூபம் என்கிறார். கண்ணனுடைய கருநிறம் க்ஷேமத்தைக் கொடுக்கட்டும் என்பர் தேசிகனார். அவனது பரத்வசூசகமான புண்டரீக நயனங்களை வெகு கம்பீரமாக எடுத்துரைக்கிறார்.

தமது அநுபவத்தை அநுமான்,

''தும்பினைத்துடைத்து மாயத்தொல்வினை தன்னைநீக்கித்
தென்புலத்தன்றிமீளா நெறியுய்க்குந்தேவரோதாம்
என்பெனக்குருகுகின்ற திவர்கின்றதளவில்காதல்
அன்பினுக்கவதியில்லை யடைவென்கொலறிதறேற்றேன்.''

எனப் பகர்கின்றான். தன் மன ஈடுபாட்டை நன்றாகக்காட்டுகிறது இப்பாடல். துயரறுதலையே யாவருந்தேடுகின்றனர். துன்பந்தொலைந்து இன்பம் வருவதையே ஆசைப்படுகின்றனர் மக்கள். மீளா நெறியாவது பரமபதம். என்புருகுவதாகக் கூறும் அநுபவும் மிகமேம்பட்டது. இவர்தலாவது தொந்தளித்தல். அவனை அநுபவித்தாலல்லது தன்னை தரிப்பித்துக்கொள்ள இயலாது என்கிறார்.

''மாமுனிவர்க்குறவாகி வனத்திடையே வாழும் கோமுனி''
என்றதைப் பார்ப்போம். கோ—இறைவன்; பரமபதநாதன்; இராமபத்ரன். இவ்வடியில் பரமபதநாதனுக்கும் விபவாவதாரபத்ரனுக்கும் வாசிகூறும் அழகு காண்க. இவன் வாழுங்கோ. அவன் விளங்குங்கோ. இவன் சேர்ந்து வாழ அவன் தனித்து விளங்குவன். இவன் இடையே வாழுங்கோ. அவன் முடியே விளங்குங்கோ. இவன் வனத்திடையே வாழுங்கோ. அவன் வானத்தின் முடியே விளங்குங்கோ. இவன் உறவாகி விளங்குவன். அவன் இறையாகி நிற்பன். இவன் முனிவர்க்குறவினன்; அவன் முத்தருக்கு இறைவன்.

'துன்பினைத்துடைத்து' என்ற பாசுரத்தில் வேதாந்தப்ரதிபாத்

யமான அனைத்தையும் அடக்கிப்பேசியுள்ளார்.

கம்பரின் கருத்து மிக ஆழமுடையது என்று முன்னரே கூறினேன். அதன் ஆழ்பொருள்களை எவ்வளவு கூறினாலும் முடியாது. வேறொரு சமயத்து விஸ்தாரமாக விளக்குகிறேன்.

தலைவர் முடிவுரை.

தலைவர் முடிவுரையாக சில வார்த்தைகள் கூறினார். இன்று சுதினம். மஹா கவிகளை நினைக்கிற தினமே சுதினம். சாஸ்திரார்த்தங்களையும், தமிழுக்கும் வடமொழிக்குமுள்ள ஒற்றுமையையும் தமிழின் மேன்மையையும் உபந்யாசகர் நன்றாக எடுத்துரைத்தார். இனிமேல் கூறவேண்டுவது ஒன்றுமில்லை. நான் கும்பகோணம் காலேஜில் சம்ஸ்கிருதம் எடுத்துக்கொண்டு படித்துவரும்போது எங்களுக்கு உபாத்தியாயர் ஸ்ரீநிவாஸாசார்யார் அவர் வராத காலங்களில் இப்பொழுது இங்கு வீற்றிருக்கும் டாக்டர் ஸ்வாமிநாதையரவர்கள் வகுப்புக்கு வந்து கம்பராமாயணத்தை இன்னிசையுடன் பதம் பிரித்துப்பாடுவார்கள். உரை விளக்குவதற்கு முன்னே அர்த்தமாகிவிடும். விஷமம் பண்ணுகிறவர்களெல்லாம் ஐயரவர்கள் பாடல்களையும் போதனையையும் கேட்டு அவர்கள் துஷ்டத்தனத்தைவிட்டு மிக விநயத்துடன் நடந்துகொள்வார்கள். கம்பர் என்றாலே இனிமைதான். அதன் கருத்தைக் கூறவும் வேண்டுமோ? தமிழ் என்றால் அது ஸம்ஸ்கிருதத்துக்கு விரோதமில்லை என்பதை நன்கு உணர்ந்தால் வித்யாஸத்துக்குக் காரணமே இல்லை. சண்டைக்கும் இடமில்லை. இத்தமிழ்ச்சங்கம் அரிய பெரிய காரியங்கள் செய்து வருகின்றது. தமிழ் ஒரு கண். ஸம்ஸ்கிருதம் ஒரு கண். அனைவரையும் அன்பில் ஒன்றுபடுத்தி அந்நியோந்யமாக்குவது தமிழ்தான். இச்சங்கம் விசேஷமாக விருத்தியாகவேண்டுமென்பதே எனது அவா.

வந்தனோபசாரம்.

சங்கத் தலைவர் வந்தனோபசாரம் அளிக்கையில் கூறியதாவது :—

தமிழும் ஸம்ஸ்கிருதமும் ஒன்றுக்கொன்று கைகொடுத்து வருகிறது. வடமொழி ஆண்மையுடையது. தமிழ் பெண்மையுடையது. கல்வியிற் பெரியர் கம்பர். அவரே கவிச்சக்ரவர்த்தி. வடமொழிக்கும் தென்மொழிக்கும் வைருத்யமில்லை. வைசிஷ்டயம் தான். தென்சொற் கடந்தான் வடசொற்கலைக்கெல்லை தேர்ந்தான் என்கிறார் கம்பர் மறைப்பொருளைக்கண்ட திருவர் என்பர் கம்பர். 'மூர்த்தத்தினை' என்றாரம்பிக்கும் சடகோபரந்தாதிச் செய்யுளில் பாரதத்தைப் பணித்தானும் நின்ற வார்த்தைக் குருகைப்பிரானுமே மறைப்பொருளைக் கண்டவர் என்கிறார். சென்ற வருடம் ஸ்ரீநிவாஸன் தலைமையில் ராகவன் உபந்யசித்தார். இராகவ சிம்ஹத்தையே கம்பர் போற்றுவது. முதிர்ந்த வயதில் சிரமத்தைக் கொஞ்சமும் பாராட்டாது இதுகாறும் இங்கிருந்து உற்சாகமூட்டிய அய்யரவர்களுக்கும், தலைவருக்கும், உபந்யாசகருக்கும், அவையோர்கட்கும், சங்கத்தின் சார்பாக மனமார்ந்த வந்தனத்தை யான் அளிக்கின்றேன். இங்ஙனம் இவ்வாண்டு கம்பர் மஹோத்ஸவ முதல் திருநாள் கொண்டாட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித்தமிழ்ச் சங்கம்.

சங்க வித்வான்கள்.

1. ஸ்ரீ உபவே தில்லையம்பூர் வெங்கடாசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரிய ஸ்வாமி (மாம்பலம்).

தலைவர் ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

உப தலைவர்கள்.

1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ராவ்ஸாஹிப் ஆர். இராமஸ்வாமி அய்யங்காரவர்கள்.

காரியதரிசியும், பொக்கிஷதாரரும். ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

கமிட்டி மெம்பர்கள்.

1. ஸ்ரீமான் ஏ. வெங்கடாசாரியரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, யஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்கள்.
5. ,, யஸ். லக்ஷ்மீ நரஸிம்மாசாரியாரவர்கள்.
6. ,, வி. யன். சிங்காரவேலு முதலியாரவர்கள்.
7. ,, வி. யம். ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
8. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
9. ,, சுந்தரசேகர நாயகரவர்கள்.
10. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.
11. ,, வி. கே. பார்த்தசாரதி ஐயங்காரவர்கள்.

காரியாலயம் ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

முக்கிய நோக்கங்கள்.

1. தமிழைப் பரவச்செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார், ஜன்ம தினங்களை கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒரு பத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்பிரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திரு நாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,

காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press. 405, High Road, Triplicane and
Published by P. R, Tirumalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St., Triplicane, Madras.